**02.07.2026**

**MC 4/2024**

**PW.1. Savitha W/o.Vishnu.**

**எதிர்மனுதாரர் ஆஜர். எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. நான் தாக்கல் செய்துள்ளா பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனது வழக்கறிஞர் சொல்லியதன்பேரில்தான் எனக்கு தெரியும் என்றாலும், நேரடியாக தெரியாது என்றாலும் சரியல்ல. நான் சொல்லிதான் வழக்கறிஞருக்கு தெரியும்.

2. இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், எதிர்மனுதாரர் விவாகரத்து கேட்டு நோட்டிஸ் அனுப்பியதால் நான் ஜீவனாம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வழக்கு போட்டுள்ளேனா என்றால், வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ நான் எந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

4. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் 20.08.2021 அன்று திருமணம் நடைபெற்றது. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் குடியாத்ததில் உள்ள பெருமாள் கோவிலில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்பு நானும், எதிர்மனுதாரரும் குடியாத்தம் கள்ளூரில் உள்ள அவரது வீட்டில்தான் வசித்து வந்தோம். மேற்படி வீட்டில் 6 மாதங்கள் மட்டும் வசித்து வந்தோம். அதன் பிறகு எனது அம்மா வீட்டில் வசித்து வந்தேன். நான் இதுநாள் வரை எனது பெற்றோர் வீட்டில்தான் வசித்து வருகிறேன்.

5. நான் கேஜிஎப்பில் உள்ள திருமண மண்டபத்தில் வேலை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது அம்மா வீட்டில் இருந்த சமயத்தில் எதிர்மனுதாரர் என்னை சேர்ந்து வாழ விரும்புவதாக அழைத்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் எனது அம்மா வீட்டிற்கு வந்து சேர்ந்து வாழ அழைத்தபோது தனியாக வீடு பார்த்து குடியிருந்தால் வந்து வாழ்வதாக சொன்னேன்.

6. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டதா என்றால், 4 வருடங்கள் காதலித்தோம். பின்னர் வீட்டில் பெரியோர்

சம்மதத்துடன் திருமண் செய்துகொண்டோம். திருமணத்திற்கு முன்பு எதிர்மனுதாரரின் வீட்டிற்கு நான் சென்றதில்லை. எனக்கும், எதிர்மனுதாரருக்கம் எப்படி பழக்கம் ஏற்பட்டது என்றால், எதிர்மனுதாரர் வீட்டின் அருகில் எனது உறவினர் வீடு உள்ளது. அந்த வகையில் பழக்கம் ஏற்பட்டது.

7. நான் எனது உறவினர் வீட்டிற்கு வந்து போகும் போதே எதிர்மனுதாரரின் வீடு மற்றும் சூழ்நிலை எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வீட்டில் அவரது அம்மா மற்றும் தங்கை வசித்து வருகிறார்கள். எதிர்மனுதாரரின் தாயாருக்கு 60 வயதிற்கு மேல் இருக்கும். எதிர்மனுதாரரின் தங்கைக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை.

8. நான் எதிர்மனுதாரரை காதலிக்கும்போது அவர் கார் ஓட்டுனராக வேலை செய்து வந்தார். எதிர்மனுதாரர் மாதம் ரூ.20000 சம்பாதித்து வருவதாக என்னிடம் சொன்னார். மேற்படி வருமானத்தை வைத்துதான் அவரது அம்மா,தங்கை மற்றும் குடும்ப செலவுகளை பார்த்து வந்தார் என்றால் சரிதான். மேற்படி சூழ்நிலைகளை தெரிந்துகொண்டுதான் எதிர்மனுதாரரை திருமணம் செய்தேன் என்றால் சரிதான்.

9. நான் திருமணத்திற்கு பின் 6 மாதம் எதிர்மனுதாரர் வீட்டில் வசித்துவந்தபோது அவரது அம்மா கூலி வேலை செய்து வந்தார். எதிர்மனுதாரரின் தங்கை நர்சிங் முடித்து தனியாரில் வேலை செய்துவந்தார். எதிர்மனுதாரர் வேலைக்கு சென்றுவந்தார் என்றால் சரிதான். நான் மட்டும்தான் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான்.

10. மேற்படி சூழ்நிலையில் நான் 6 மாதம் எதிர்மனுதாரருடன் வாழ்ந்தபோது என்ன காரணத்திற்காக எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால், எதிர்மனுதாரர் என்னை சந்தேகப்பட்டு கொடுமை செய்ததால் சென்றேன். என்ன காரணத்திற்காக எதிர்மனுதாரர் என்னை சந்தேகப்பட்டார் என்றால், நான் எனது பெரியம்மா மகன் மணிமாறன் என்பவருடன் பேசுவதால் சந்தேகப்பட்டார். மணிமாறன் என்பவரும் குடியாத்ததை சேர்ந்தவர் ஆவார்.

11. எதிர்மனுதாரர் என்னை சந்தேகப்பட்டு கேட்டபோது என்ன பதில் சொன்னேன் என்றால், அதுபோன்று எதுவும் இல்லை என்று சொல்லி சமாதானம் செய்தேன். எதிர்மனுதாரர் அதற்குபின்னிட்டு என்னிடம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. தினமும் சிறிது நேரம் செல்போன் பயன்படுத்தி வந்தால் கூட சந்தேகப்பட்டு என்னிடம் கேட்பார். அவரது தங்கை தவறான உறவு இருப்பதாக நான் சொன்னதால் எதிர்மனுதாரரை தூண்டிவிட்டு அவரது தங்கை தினமும் பிரச்சனை செய்து வந்தார்.

12. மணிமாறனின் சொந்த ஊர் சேத்துவண்டை ஆகும். எதிர்மனுதாரர் வீட்டின் அருகில் உள்ள எனது சித்தி வீட்டிற்கு வந்து பேசுவார். எனது கணவர் வீட்டில் இருந்து எனது சித்தி வீடு 4,5 வீடுகள் தள்ளி உள்ளது. நான் சித்தி வீட்டிற்கு சென்று பேசியதால் எதிர்மனுதாரர் மணிமாறன் எனது அண்ணன் என்பதால் அவர் இங்கு வந்து பேசு என்று தான் சொன்னார் என்றால் சரியல்ல.

13. எதிர்மனுதாரர் நல்ல எண்ணத்தில் சொன்ன விஷயத்தை நான்தான் தவறாக புரிந்து கொண்டு சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது சித்தி வீட்டிற்கு செல்லும் விவரத்தை எனது கணவரிடம் சொன்னேனா என்றால், சொன்னேன். தினமும் மாலை நேரத்தில் எனது சித்தி வீட்டிற்கு செல்வேன். எதிர்மனுதாரர் வீட்டில் கழிப்பறை வசதி இல்லாததால் எனது சித்தி வீட்டிற்கு செல்வேன்.

14. மேற்படி பிரச்சனையால்தான் எனக்கும், எதிர்மனுதாரருக்கும், பிரச்சனை ஏற்பட்டு எனது அம்மா வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னிடம் சந்தேகப்பட்டு கொடுமை செய்ததால் சென்றேன். எதிர்மனுதாரர் கொடுமை செய்ததாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால், புகார் அளித்துள்ளேன். குடியாத்தம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன்.

15. மேற்படி புகார் அளித்ததற்காக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், காவல் நிலையத்தில் நகல் எதுவும் கொடுக்காததால் தாக்கல் செய்யவில்லை.

**நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**Sd/–R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**